உ
சிவமயம்.
ஸ்ரீ அம்பாள் துணை.

506
19 JUL 192



# கோப்பு மாரியம்மன் மகிமைச்சிந்து

அரியாலூர் மகா-ள-ள-ஸ்ரீ
வா. மு. அழகர் சாமி அவர்களால்
இயற்றப்பெற்று

கோப்பு
கு. கருப்பண்ண முத்திரியர், ந. ரேங்கசாமி நாயுடு
இவர்கள் விருப்பத்தின்படி

திரிசிரபுரம்
ஜனானுகூல அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பெற்றது
1928
புஸ்தகம் 1-க்கு விலை அணா 1

ஸ்ரீ

அம்பாள் துணை.

## விநாயகர் வெண்பா.

கோப்புப் பதிதனில் வாழ் கோமளமே மாரியுன்மேல்
சேர்க்கும் கவியதனைச் செந்தமிழால்—யார்க்கும்
விரித்துரைக்க என்மனதில் வேழமுகத்தோனே
கருத்துவைக்கவே துதித்தேன் கார்.

## சரஸ்வதி துதி.

பக்தியுடன் அம்மன் பதமலரையான் துதிக்க
நத்துமழகசெந்தன் நாவினிலே—இங்கு
சென்று குடியிருப்பாய் தேவி கலைவாணி
என்றும் துதிக்கு மெணக்கார்.

## முருகர் துதி.

கொள்ளைநோய் அம்மை கொடூரப் பெருவலியால்
சள்ளையொன்றும் நேராமல் தற்காக்கும்—கோப்பு
மாரியின்மேற் சிந்து மகிழ்ந்துரைக்க வேல்முருகன்
தாளைப்பணிந்தே னருள்தா.

## பாளைவாய் கமுகில் என்ற மெட்டு.

திருச்சிக்கோட்டைக்கு மேற்கிலிருந்து மேற்மயிலில்
விருப்பமுடனே கோப்புக்கிராமத்தில்—அம்மனிருக்கும்
ஆலயம் வெகுசீர் நேர்த்தி அதில்
என்ன விநோதங்கள் உன்னித்துடன் அன்னமே பாராய்
நன்னயத்துடன்—ஏந்திழையே பார்த்து மகிழ்வாயடி
நானின்னமும் சொல்வேனன்பாகக் கேளடி (தி)

கன்னியே கோவிலின் வாயல்தன்னிலும் கோடானகோடி
கற்பூரத்தீபாராதனைக் கூட்டமே—அங்கு எப்போதும்
நடக்குந் திருநாட்டமே எக்காள
நாகசுர மேளவாத்திய மென்னுளு முழங்கும் நம்மாளும்
மாரிகோவில்—என்னவென் றெடுத்துரைப்பேன் மாதரியே
இந்த மண்ணுலகில் கண்டிராக் கண்காக்ஷியே (தி)

600 008

மங்கையாம் ஆரியமாலை மன்னவன் காத்தவராயன்
தங்கிருக்கும் ஆலயத்தைப்பாரடி—எந்தன்
மங்கையேநீ பார்த்துக்களிகூரடி நம்
மனமகிழ்ந்திட மதுரைவீரனைக்கனமுடன் கண்டுகளிப்போம்
சிந்தனை—மங்கையே அவரிருக்கும் பந்தியே—பார்த்து
வந்திடுவோம் செல்லபோர்க்கு முந்தியே (கி)

கருப்பசாமியை நாமும் விருப்பமுடனேபார்த்து
பெருக்கமுடன் வருவோம் கண்மணி
அங்கடிப்பார் பூஜைக்கு வெண்கலமணி
அவர்காலில் விழுந்தடி தான் பணிகுவோர் காலம்
வினையணுகாமலருள் செய்வார்—கற்பூரச் சாம்ராணித்
தீபாராதனை—நாம் கைகூப்பிச் செய்வோமவற்குப்பூஜனை.

கன்னியே இருபத்திரண்டாம் காப்புக்கட்டி மாரியம்மன்
உன்னிதமாய்த் தேரேறுங் சிங்காரத்தை—எடுத்துரைக்கத்
திறமையுள்ளார் யாரதை இந்த
உலகமுழுவதும் புகழும் சுந்தரி கமலபாதங் கடாக்ஷித்தாதரி
உத்தமியாங் கோப்பு முத்துமாரியே—போற்றி
இத்தரையில் யான் துதித்தேன் கோரியே.

எத்திசை யோர்கள் புகழும் சத்திவுமையாளே கோப்பு
முத்துமாரி யுன்மேல் சிந்துபாடினேன்—எந்தன்
சித்தமதிலே யுனைக் கொண்டாடினேன்—இங்கு
வற்றினே னழகேசன் செந்தமிழ் மாற்றியேகவி
வந்துதீர்த்தருள்—எங்குமே புகழ்ந்திடுங் கல்யாணியே
உனையென்று மறவேனுன்பாதம் பேணியே.

## உமேலை முத்துச்சாமி பாட்டே-என்ற மெட்டு.

கோப்பு மாரியம்மை முத்துத்தாயே—உனைக்கோரினேன்
அழகருந் தன்சேயே உன்னைக்
கும்பிட நினைத்தவர்க்குத் தென்புடன் வரமளிப்பாய்
நீயே அருள்வாயே.

புவனமுழுதும் புகழ்கொண்டாய்-உனைப்போற்றிடும்
ஜனங்கள் ஜெயம் கொண்டார் நல்ல
புத்திரமித்ரரோடு இத்தரையிலுள்ளவர்க்கு
வந்தாய் வரம்தந்தாய்.

பாவிகளைச் சூரையிட்டுப் பார்ப்பாய்-உந்தன் பாதமதை
நோக்கினோரைக்காப்பாய் அன்பு
பாலித்திடுவா யென்மீது சீலமுடனுதரிக்கும்
பாரீ முத்துமாரீ

கச்சைமணித் தாழ்வடச்சிங்காரீ-கண்ணன் பச்சைமாலின்
தங்கையான சூலி உன்னை
இச்சையாய்ப் பணிந்தவற்கு அச்சதைதிருநீர்
தரும் மாரி அலங்காரி

கோப்பு எட்டுக்கரைப் பட்டயதார்கூடி-உன்னைத் திட்டமாய்க்
கொலுவமர்த்த நாடி இங்கு
அட்டதிக்கெல்லாம் புகழும் கட்டழகி மாரியைக்
கொண்டாடி வந்தார் கூடி

இரதத்தின் பெருமை யென்னஜோக்கு—உனை நாடினோர்க்கு நீ
கொடுப்பாய் வாக்கு உன்னை
நாடியே அழகர் தமிழ்பாடினேனெனக்
கருள்வாய் வாக்கு துயர் நீக்கு.

## பத்தோன்பதாம் நூற்றுக்குமேல் என்ற மெட்டு.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டு இருபத்தெட்டிலே—வேண்டி
னேன்—கோப்புமாரியம்மன் விமரிசையை விந்தையிது
மாக்ஷி இதைக்கண்டவர்க்குக் காக்ஷி.

இருபத்திரெண்டாம் காப்புயின்பமுடன் கட்டிவைத்து-கடைசிநாள்
படுகளங்கள் கார் மேகம் சூழ்ந்ததுபோல்—வருகுதையா
கூட்டம் இதைப் பார்த்திடக் கொண்டாட்டம்

கொடிகுடை கள்சாமரையும் கொம்புதப்பு மேளத்துடன்—
விருதுடனே வருவதையும் வெகு ஜனங்கள் பார்த்துச்சொல்வார்
இந்திரலோகந்தானோயிதுயிங்குவந்ததேனோ.

என்று சொல்லி ஜனங்களெல்லாம் யின்பமுடன்கும்பல் கூடி
நின்று கொண்டிருக்கையிலே அங்கு வந்தமிராசுதார்கள்
எட்டுப்பேரும் கூடிவந்திட்டாரங்கே நாடி

கத்தி பல ஈட்டிகளும் கவனமுடன் கைபிடித்து
சுத்தி நிற்கும் குடிபடையைச் சொல்லி முடியாது என்னல்
யார்க்கும் வெகுதீரம் இதை பார்க்கவே கெம்பீரம்

நீர்தெளித்துக் குட்டிவெட்டி நேர்மையுடன் தாங்கள் குத்தி
ஓடிவருகுவார்கள் உத்தமியாள் மாரி கோவில்
அன்றுமுதல் நாடி ஒன்பது நாளும் கூடி

தினந்தினமும் சதிர் நடிப்பாம் தெருமுழுதும் பஜனைக்கோஷ்டி
புவனமாளும் கோப்புமாரி புதுமையவள் சன்னதியில்
பார்த்து மகிழ்வோமே மாரி பதம்பணிவோம் நாமே

ஆடு கிடா கோழிகளும் அன்புடனே பொங்கல்களும்
மாவிளக்குக் கூட்டத்துடன் வருகுதய்யா மாரியம்மன்
சன்னதியை நாடி சந்தோஷ முடனே கூடி

வாழைக் கமுகுகளாம் வரிவரியாத்தோரணமாம்
பாளை மணம்வீசும் பத்தினியாள் ஆலயத்தில்
வீரமணி ஓசை அங்குபோடுவார்கள் பூஜை

கோரினேன்கோப்பு முத்துமாரியின்மேல் சிந்து தமிழ்
பாரிலுள்ள கனவான்களே பக்ஷமுடன் பிழைபொறுப்பீர்
அழகர் தமிழ்பாட்டு அதைப் புகழ்ந்து கேட்டு

நாகூறுமீற என்றமெட்டு

துர்க்கை திரிசூலி சுந்தரக்கம்பீரி—அற்புதலங்காரியே
கோப்புமாரியம்மா உனைக்கோரியே (1)

என்தாயையும் நாடி சிந்தைமகிழ்ந் தோடி—வந்தேனுனைத்தேடியே
வந்தனமிக தந்தேன் பலகோடியே (2)

வேப்பிலைச் சிங்காரி கோப்புமகமாரி—யார்க்கு முபகாரியே
ஏழையின்துயர் தீர்க்குமலங்காரியே (3)

பங்கமிலாயிளஞ் சிங்கமே மாற்றுயர்—தங்கக்கனிரசமே
உந்தன் மகிமை யெங்கும் பிரகாசமே. (4)

வந்தவினை யோட்டும் சிந்தைகளிப்பூட்டும்—உந்தன் திருநாட்டமே
துதிக்கும் பலர்யெங்கும் பெருங்கூட்டமே (5)

கோப்பயிலா பேட்டை குடிகள் வாழும் நாட்டை காக்கும்படி
கும்பிட்டேன் உன்பாதமதைப் போற்றிட யான் வந்திட்டேன் (6)

பட்டத் தலைவர்கள் எட்டுமிராசுகள் திட்டமுடனவர்கள்
குடும்பமதை விட்டகலாமலருள் (7)

அழகர்தமிழ்பாடி ஆசையுடன்கூடி அன்பாய் வந்தேன் நாடியே
உன் சன்னதியை இன்பமுடன் தேடியே (8)

## தசரதராஜ குமாரா-என்ற மெட்டு

(பல்லவி)

கோப்பிலமரு மாரித்தாயே, உந்தன் சேயே, இனி நீயே
வந்தருள்வாயே.

(அநுபல்லவி)

தரணியில் யானே தயங்கி நின்றேனே-தாயே உமது
திருத் தாழ் பணிந்தேனே
மாய வலையில் சிக்கி வருந்தாமல்தானே - வந்து காத்தருளும்
சீமானே - இங்கு நானே - உனைத்தானே - துதித்தேனே (1)

ஆலைக்கரும்பதுபோல் ஆகினேன்தேவி
அடியெனுக் கருள்புரி அமிர்த சஞ்சீவி
பாலன் படுந்துயரம் பார்த்து நீதாவி—பச்சமுடனே என்
முன் வாரும், அருள்தாரும், வினைதீரும், எனைக்காரும் (2)

சிங்கவாகனமேறும் திகளொழி மணியே
திருமாலின் தங்கையான தெவிட்டாத கனியே
வருவினை தீர்க்கக் கோப்பில் வந்தமர்ந்தினியே—வருந்திடு
வோர்களைக் கண்பாரும், தினந்தோறும், எனைக்காரும், வசந்தாரும்

துஷ்டர்களை வதைக்கும் துர்க்கை செம்பீரி
துதிக்குமவர்க்கு நல்ல சுகந்தருமாரி
பக்தனழகர் தமிழ்க்கே யுபகாரி—பாடித்துதித்துப் புகழ்ந்தேனே,
உனைத்தானே, இனி நானே, பசுந்தேனே (4)

## கும்மி.

கும்மியடி பெண்கள் கும்மியடி நம்ம கோப்பு மாரியின்மேல் கும்மி யடி—நம்மையாளும் விநாயகர் பாதத்தை நாடிக்கும்மியடியுங்கடி 1

சித்திரை மாதத்தில் காப்புகட்டி நல்ல சேர்ந்த வைகாசிஇரண்டாம் தேதி—விஸ்தாரமாகவே மாரிதேரேறின விந்தையைப்பாடி மாதர்களே (2)

மங்கையரே வந்தோம் மாரிதேரின்மேல் மகிழ்ச்சியாய் ஏறி வாரதைப்பார்—சிங்காரமாக கும்மியதுப்பாடி தீர்க்கமாய்ச் சொல்லி யடியுங்கடி (3)

ஆயிரங்கண்ணு முடையவளாமாரி அண்டர்கள் துயாம் தீர்த்தவளாம்—தாயிவளென்றுமே தையலரே நீங்கள் சாய்ந்துக்கும்மியடியுங்கடி (4)

நெற்றியில் திலதப்பொட்டுமிட்டு நல்ல நேர்விழிக்குமே மையெழுதி எத்திசைபுகழும் கோப்பு மாரிதேரில் ஏறிவருவதைப் பாருங்கடி ()

கண்டசரப்பளிக் காசுமாலையுடன் கம்மல் சிமிக்கிக் காலாளியுடன் தண்டை சிலம்புகள் தானணிந்துகொண்டு தையலாள் வாரதைப் பாருங்கடி (6)

உடுக்குப்போன்ற இடைதனிலே நல்ல ஒட்டியாணமதைத்தான் பூட்டி—இடுக்கஞ்செய்வோரைக் கொல்லுஞ் சூலங்கொண்டு ஏந்திழையாள்வாராள் பாருங்கடி (7)

மல்லிகை முல்லையிருவாச்சிபிச்சி மரிக்கொழுந்துடன் சண்பகமும் நல்ல திணுசான வர்ணமாலை பூண்டு நாயகி வாரதைப்பாருங்கடி. (8)

ஆயிரம் பொன்கள் விலைபெற்றதேரின்மேல் அழகான வாழைமரங்கள் கட்டி—நேயமாய்க் கனிவர்க்கம் ஈச்சங்குலையுடன் நேரிலிருப்பதைப்பாருங்கடி (9)

மேளவாத்தியங்கள் தான்முழங்கதேரில் வெண்சாமரைதாசிவீசிவர
தாளவரிசையுடன்கூடி நம்மள்தையலாள் வாரதைப் பாருங்கடி(10)

பார்க்கப்பார்க்கக் கண்ணாயிரம் வேண்டுமே பார்வதி மாரியாள்
பாதத்திற்கே,— தீர்க்கமுடன் மலர்சாற்றியே நம்மள்சேர்ந்து
வேடிக்கைப் பார்ப்போமடி (11)

இன்னு மனேக விதங்களுண்டு நம் எந்திளே மாரியின் அற்புதங்கள்
உன்னதமாகவே ரெண்டாம் பாகத்திலே உள்ளபடியே உரைப்
போமடி. (13)

மாரியம்மன் கும்மி வாசித்துப் படித்து மக்கள் மைந்தரோடு செல்
வம் பெற்று—பாரிலெந்நாளும் சுகத்தோடிருந்துமே பாங்குடன்
வாழ்வாரே வாழி வாழி. (14).

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

